ஆனந்த விளக்கம்

பதிப்பாளர்

ர. சக்தி பிரியா

நெறியாளர்

முனைவர் ய. மணிகண்டன்

உதவிப் பேராசிரியர்

தமிழ் இலக்கியத்துறை

சென்னைப் பல்கலைக்கழகம்

பரிதிமாற் கலைஞர் வளாகம்

சென்னை - 600 005.

2011

ஆனந்த விளக்கம்

சுவடியியலும் பதிப்பியலும்

பட்டயப் பேற்றிற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு

பதிப்பாளர்
ர. சக்தி பிரியா

நெறியாளர்
முனைவர் **ய. மணிகண்டன்**
உதவிப் பேராசிரியர்

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
பரிதிமாற் கலைஞர் வளாகம்
சென்னை-600 005.

2011

சுவடியியலும் பதிப்பியலும்

2010-2011ஆம் ஆண்டிற்கான
பட்டயப் பேற்றிற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு
பதிவு எண் : 43011060

முனைவர் ய. மணிகண்டன்,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
பரிதிமாற் கலைஞர் வளாகம்,
சென்னை-600 005.

நெறியாளர் சான்றிதழ்

சென்னைப் பல்கலைக்கழக, **"சுவடியியலும் பதிப்பியலும்"** பட்டயப் பேற்றிற்காக 2010-2011ஆம் கல்வி ஆண்டில் **"ஆனந்த விளக்கம்"** என்னும் தலைப்பில் உருவாக்கப்பட்டுள்ள இப்பதிப்பேடு என்னுடைய மேற்பார்வையின் கீழ் செல்வி **ர.சக்தி பிரியாவின்** சொந்த முயற்சியில் உருவாக்கப் பட்டுள்ளது என்று சான்றளிக்கிறேன்.

நெறியாளர்

நாள் :

இடம்: சென்னை-5. **(ய. மணிகண்டன்)**

ர. சக்தி பிரியா,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
பரிதிமாற் கலைஞர் வளாகம்,
சென்னை-600 005.

பதிப்பாளர் உறுதிமொழி

சுவடியியலும் பதிப்பியலும் என்னும் பட்டயப் பேற்றிற்காகச் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறைக்கு அளிக்கப்பெறும் **"ஆனந்த விளக்கம்"** என்னும் தலைப்பிலான இப்பதிப்பேடு, எனது சொந்த முயற்சியில் உருவானது என்றும், இது இதற்கு முன்பு வேறு எந்தப் பட்டயத்திற்கும் அளிக்கப் பெறவில்லை என்று உறுதி அளிக்கிறேன்.

பதிப்பாளர்

நாள் :

இடம்: சென்னை-5. (ர. சக்தி பிரியா)

என் உயிரினும் மேலான

தாய், தந்தை

மற்றும்

குடும்பத்தார்க்கு……

உள்ளடக்கம்

தலைப்பு	பக்கம்
நன்றியுரை	13
பதிப்புரை	15
ஆனந்த விளக்கம்	19
பாடற் முதற்குறிப்பு அகராதி	53
அடிக்குறிப்பு	58

நன்றியுரை

சுவடியியலை பட்டயப்படிப்பாக வைத்துள்ள சென்னைப் பல்கலைக் கழகத்திற்கும், முதுகலையில் சுவடி பற்றிய புரிதலையும் மாணவர்கள் பெற வேண்டும் என்று மாணவர்களை ஊக்கப்படுத்தும் தமிழிலக்கியத்துறைத் தலைவர் **பேரா. வீ. அரசு** அவர்களுக்கும் முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுவடியைப் பதிப்பிக்க அனைத்து நிலைகளிலும் நெறியாள்கை செய்த பேரா. **ய. மணிகண்டன்** அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுவடியியல் வகுப்பு எடுத்த விரிவுரையாளர் **இளங்கோ, லதா** அவர்களுக்கும் அரசினர் கீழ்த்திசை சுவடி நூலகத்தார்க்கும், சுவடியைத் தேர்ந்தெடுக்க உதவிய எனது தோழியர் **நா. சத்தியா, சு. சரோஜினி, ப. தீபா** அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி.

என்னை பெற்றெடுத்து, வளர்த்து, படிக்க வைத்துக் கொண்டிருக்கும் என் **அன்புத்தாய், தந்தைக்கும்** மற்றும் நான் கல்வி பயில பல்வேறு வகையில் என்னை ஊக்கமளித்து வரும் என் குடும்பத்தார்க்கும் நான் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

நன்றி.

பதிப்புரை

ஆனந்த விளக்கம் என்னும் இந்நூல் வாதவூர் இறைவனாகிய சிவபிரானைப் போற்றியும் புகழ்ந்தும் பாடுவதாக அமைந்துள்ளது.

இதிலுள்ள பாடல்கள் அடியேன் ஒருவன் இறைவனை நோக்கிப் பாடுவதாக அமைந்துள்ளது. மேலும் அவ்வடியேன் வாதவூர் இறைவனிடம் தனக்கு அஞ்செழுத்தைப் (சி வா ய ந ம) பகருமாறு கேட்க, இறைவனும் நேரில் தோன்றி பகர்ந்தருளினார் என்பன போன்ற பல செய்திகள் இதில் இடம் பெற்றுள்ளன.

மேலும் இதில் மொத்தம் 100 பாடல்கள் உள்ளன. இப்பாடல்கள் அனைத்தும் விருத்தப்பாவால் பாடப்பட்டுள்ளது.

விருத்தம் –வகைகள்

விருத்தத்தில் வாய்பாடு பின்பற்றப்பட்டிருக்கும். இதில் பல்வேறு வகைகள் உள்ளன. அவை,

1. அறுசீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
2. எழுசீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
3. எண்சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
4. இரட்டை ஆசிரிய விருத்தம்
5. கலி விருத்தம்
6. சந்தவிருத்தம்
7. சந்தக்கலி விருத்தம்
8. கலிச்சந்த விருத்தம்

உள்ளிட்ட பல்வேறு விருத்த வகைகள் உள்ளன.

இந்நூலில் உள்ள கடவுள் வாழ்த்துப் பாடலில் கலி விருத்தம் பயின்று வந்துள்ளது, மேலும் இதில் 51 பாடல்கள் அறுசீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தாலும், 49 பாடல்கள் எண்சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தாலும் அமைந்துள்ளது.

அறுசீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தில் பின்பற்றப்படும் வாய்பாடுகள் :

இதில் மொத்தம் 7 வகையான வாய்பாடுகள் உள்ளன. அவை,

1. "விளம் மா தேமா
   விளம் மா தேமா".

2. "மா மா காய்
   மா மா காய்"

3. "காய் காய் காய்
   காய் மா தேமா".

4. " மா விளம் விளம் விளம்
   விளம் காய்"

5. "மா விளம் மா
   விளம் விளம் மா"

6. "விளம் விளம் மா
   விளம் விளம் மா"

7. "மா மா மா
   மா மா காய்"

இந்நூலில் அறுசீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தில் வரக்கூடிய 51 பாடல்களும் 'விளம் மா தேமா' என்னும் வாய்பாட்டினால் பிரிக்கப்பட்டுள்ளது.

சான்று :

"ஏதமே தீர்க்க வந்த
ஏதனே யெந்தை யானே
போதனே யருளிச் செய்த
வெழுத்தெலாம் புகழக் கொண்டே
பாதமே முடிமேல் வைத்து
பகிர்ந்ததோர் ஒளியைக் காக்க
நாதனே யதனுள் நின்ற
நடுநிலை நவின்ற தேதோ"

எண்சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தில் பின்பற்றப்படும் வாய்பாடுகள் :

இதில் 3 வகையான வாய்பாடுகள் உள்ளன. அவை,

1. "காய் காய் மா தேமா
   காய் காய் மா தேமா"

2. "காய் காய் காய் மா
   காய் காய் காய் மா"

3. "மா கூவிளம் விளம் மா
   மா கூவிளம் விளம் மா"

இந்நூலில் எண்சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தில் வரக்கூடிய 49 பாடல்களில் 46 பாடல்கள் 'காய் காய் மா தேமா' என்னும் வாய்பாட்டினாலும் 3 பாடல்கள் 'காய் காய் காய் மா' என்னும் வாய்பாட்டினாலும் பிரிக்கப்பட்டுள்ளன.

சான்று 1 :

"மூலத்தில் நிற்கும் குஞ் சரனைப் போற்றி
முளரிநான்மு கன்றன்னை முறையா லேத்தி
ஞாலத்தை யுண்டமல ரடியை வாழ்த்தி
நலஞ்சிறந்த ருத்திரனை நயந்து போற்றி
சீலத்தில் மயேசுரனைத் தெரிசிக் தப்பால்
சிறந்த சதா சிவன்றன்னைச் சிந்தை செய்து
கோலத்தில் நின்றநாம களையு மன்பால்
கும்பிட்டேன் குருவருளைக் காட்டு வென்றே"

இப்பாடலில் 'காய் காய் மா தேமா' என்னும் வாய்பாடு பயின்று வந்துள்ளது.

சான்று 2 :

"ஓங்கார மானதுவே நாதமென வுணர்நீ
உற்றதொரு வுறுவெழுத்தை விறுவென வுணர்நீ
ஆங்கார மானதுநீ யன்பதனால் நீக்கு
யகாரமெனு மெழுத்ததுவை யானடியேன் றெண்ணி

நீங்காத மாயைதன்னை நெஞ்சுரத்தால் நீக்கி
நின்றருளை பாத்தக்கால் நீயறிவை கண்டாய்
ஒங்காரத் தொளிதானே யுபதேசப் பொருளும்
உம்பருக்கும் தெரியாத வுண்மைநடு நிலையே"

இப்பாடலில் 'காய் காய் காய் மா' என்னும் வாய்பாடு பயின்று வந்துள்ளது.

ஒரு சில பாடல்களில் வாய்பாடு சரிவர பொருந்தவில்லை. எனவே வாய்பாட்டிற்கு முக்கியத்துவம் கருதி ஒரு சில பாடல்களில் உள்ள சில சொற்கள் மாற்றி பதிப்பிக்கப்பட்டுள்ளன.

பதிப்பாளர் செய்த திருத்தங்கள் பாடலின் எண்கள் குறிக்கப்பட்டு பின்னால் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் ..... இக்குறி இடப்பட்டுள்ள இடங்கள் பாடலில் ஒரு சொல் (அ) தொடர் விடுபட்டிருப்பதைக் குறிப்பதற்காக இடப்பட்டுள்ளது.

ஆனந்த விளக்கம்

வரமருள் தவமெல்லாம் வளர்ந்தொன் றாகவே
யரனரு ளானந்த விளக்கந் தன்னையான்
வரமெனு மருளினா லுகந்து பாடவே
கரமொரு பொருளெனக் காரிமுகன் காப்பாம்.

1. மூலத்தில் நிற்கும்குஞ் சரனைப் போற்றி
முளரிநான்மு கன்றன்னை முறையா லேத்தி
ஞாலத்தை யுண்டமல ரடியை வாழ்த்தி
நலஞ்சிறந்த ருத்திரனை நயந்து போற்றி
சீலத்தில் மயேசுரனைத் தெரிசித் தப்பால்
சிறந்தசதா சிவன்றன்னைச் சிந்தை செய்து
கோலத்தில் நின்றநாம களையு மன்பால்
கும்பிட்டேன் குருவருளைக் காட்டு வென்றே.

2. பேசுபுக ழாதியாதி ருவாத வூரன்
பெருகுபுக ழாதியருளா னந்த நாதன்
நேசமிகுங் குருதோத்ரங் காதி நாதன்
நெறிபரவும் பிரளையா னந்த நாதன்
வாசமிகுங் குழந்தையா னந்த நாதன்
மலரடிசே ரும்பரமா னந்த மூர்த்தி
வீசு புகழ் மயிலையா னந்த நாதன்
மெய்யுணர்ந்துக் கயிலைவழி மேவி னோரே.

3. இங்கவரும் சந்தான மரவு தன்னில்
இலங்கியதோர் தீபமென்னு மேக நாதன்
செங்கமலத் தாள்பணிந்த வடியார் தம்மிற்
சென்றநகர் வளநாட்டிற் சிறந்து வாழ்ந்து
துங்கமிகு நாதனரு ளாக வந்து
தோன்றுமணி யழகியா னந்த நாதன்
சங்கையுள்ள வானந்த விளக்கந் தன்னை
சாத்தினேன் சந்தானந் தழைக்க வென்றே.

4. அறிவுளோர் பகர்ந்த நூல்கள்
ஆதித்த கிரனம் போறுச்
செறிவுளோ ரிடங்க டோலஞ்
செறிந்தினி திருப்பக் கண்டு
குறியுளோர் போல யானுங்
கூறிய பொன்சொல் தானும்
நெறியுளோ ரிடங்கள் சென்றால்
நிறைதமி ழாகுந் தானே.

5. நஞ்சர வென்று நித்தோர்
நலம்பெறு மணியுள் கண்டு
வஞ்சக மன்றி யந்த
மணியினைக் கொள்வ ரேபோல்
செஞ்சொலில் லாபா வின்பால்
செயலிது வென்று நீத்துந்
தஞ்சமா மதனுட் சார்ந்த
சத்தமீக் கொள்வர் தக்கோர்.

6. என்றுமுன் னோர்கள் சொன்ன
இயல்பினை யெண்ணி யானும்
நன்றிசே ரடியார் கேட்க
நல்லதோர் வழியீ தென்றே
மன்றுசே ரருளைப் போற்றி
வளம்பெறு விருத்த மாக
இன்றுரை செய்ய ஒற்றேன்
இயல்பினாற் கேளு மிப்பால்.

7. திருமாலு நான்முகனுந் தேடிக் காணா
தபரத்தினுள் பொருளாகச் செறிந்து நின்றே
யுருவாக யோங்காரத் தொளியே யெங்கும்
பருக்குமி .... முணர்வாய் நின்ற
கருவாகி யுருவாகிப் பாச மாகிக்
கலாதிகளுக் கெட்டாத கருணை யானைக்
குருவாகி யெனையாள வேண்டி யிந்த
குவலையத்தில் வந்தபடிக் கூற லுற்றேன்.

8. வடகயிலை யதன்மீது வந்து தோன்றி
மாதினுடன் வீற்றிருந்த வளமை கண்டு
விடமுடைய வனந்தன்மிசை துயின்ற மாலும்
விரிஞ்சனும் வந்தடிபணி யவேத மோது
தடமுடைய முனிவருட னிமையோர் தாமுந்
தாடொழுது தவப்பயனீ தென்று போற்ற
இடமுடைய வடநீழல் தனிலி ருந்தே
எந்தையானா லவருக்கு மியம்பிப் பின்னர்.

9. அத்தலத்தி லேயிருந்து யனேகங் கோடி
ஆகமத்தின் பயனுணர்த்தி யவையும் நீங்கிச்
சித்தமலி யம்பலத்தே கூத்துங் காட்டித்
தில்லைமூவர் ஆயிரவர் தம்மை யாண்டு
முத்தமிழா லருளச்செய மூவ ருக்குங்
முதல்வனெனும் வாதவூர் முனிவ னார்க்கு
இத்தலத்தில் குருவாகி வந்தாட் கொண்டான்
எந்தைபிரா னென்னையாளி ரக்க முற்றே.

10. கருக்குழியே பவக்கடலாய் காய மோடு
மரக்கலமா யிவையனைத்தும் கரைக்கா ணாதே
பெருக்கவளர் காமகலைப் பெரிய தீவி
லகப்பட்ட பேதை யென்னை
யுருக்கமுடன் றவப்பயனா லூழிக் கால
உந்திடவே யுகந்து போந்து
திருக்கரவந் துதித்தபிரான் றிருவருளே
துறையாகச் சேர்ந்த பின்ன போதில்.

11. தையலுடன் மான்மழுவுஞ் சடைமேல் நின்ற
சந்திரனை யுமொளித்துத் தனிய னாகிப்
பையவேயா னந்தன்வ டிவுமா னப்பின்
பாதமலர் வருந்திடவே நடந்து பாரில்
செய்யதிரு குத்தால மந்தக் காசி
திருநகர்த னில்வந்தோர் சாலை மேவி
வய்யரமாந் திருந்துயென்னை தடுத்தாட் கொள்ளு
மன்புகண்டு யான்சென்ற தடைவு சொல்வாம்.

12. ஆனந்த வடிவுடையோன் ஏக நாதன்
அருள்கமலத் தாள்போற்று மடியார் தம்மிற்
தேனுகந்த திருவாக்கா லென்னை காத்து
திருநீற்றை சிவாயநம வென்று சாத்தி
யூனந்த மானவுட லறிய வேண்டி
யுபதியாக மங்களையும் வுரைத்துக் காட்டித்
தானந்த மில்லாதெ ழுத்தஞ் சுண்டு
தரணியினில் நீயறியச் சாற்று வோம்நாம்.

13. என்றுரைத்த குருபரனே ஏக நாதா
ஏழையடியே னையாளவந்த எம்பி ரானே
நன்றுரைத்த யெழுத்ததனை யன்பு தன்னால்
நாடியேற்கு ணத்தியருள் நாத யோகி
இன்றுனது மாணாக்கண் யானு மென்று
இசைந்திடு சொல்தனக்கி ரங்கியே பங்கன்
துன்றியதோர் அன்புகந்தோ ரொருத வத்தில்
துலங்கியிருந் தருள்நோக்கால் நோக்கிச் சொல்வார்.

14. முன்னுரைத்த வெழுத்தஞ்சின் பெருமை தன்னை
முனிவரோடு தேவரின முறைகள் தோரும்
பின்னையயன் மால்தானும் பேச மாட்டார்
பெருமையுள்ள வஞ்செழுத்தைப் பேச வென்றி
லுன்னுடைய பொருளுமுட லுயிரு மன்பா
லுதகஞ்செய் திடுதியென வுரைத்து நாதன்
அன்னைபிதா குருத்தெய்வம் நீயே யானும்
அடிமையென வீழ்ந்துதொழு தறைந்த பின்னர்.

15. அய்யருளக் கமலமுக மலர்ந்து நோக்கி
அளவில்லா பேரின்ப மருள்மெய்க் கொண்டு
மெய்யிலுள்ள வினைப்பயனை விளியால் நீக்கி
வேதத்தின் முடிவுள்ள விளைவை நோக்கிக்
கையிலகப் பட்டகனி யினைப்போல் வந்து
கருணையுள தவமிகவே யாகஞ் சேரும்
பையவேயஞ் செழுத்தினையும் பகரு முன்னம்
பசுபதிபா சமும்நீக்கிப் பகர வேண்டும்.

16. பதியென்றும் பசுவென்றும் பாச மென்றும்
பகர்ந்தகுரு பரநாதா பரம யோகி
பதியேது பசுவேது பாச மேது
பரிவினுடன் பிரித்தெனக்கு பகர வேணும்
பதியாக நின்றதுதான் சோதி யாகும்
பசுவாகி நின்றதுநீ தானே யாகும்
அதிவல்லீ ரிவ்வுடலே பாசமாகும்
வகுத்தபடி யின்னதென்று வணங்கிக் கேள்நீ.

17. பதிதனையும் பசுபாச மறியா தாகும்
பதிதானே யறியும்ப சுபாசந் தன்னை
மதியுடனே பசுவறியும் பாசந் தன்னை
மன்னுகின்ற பாசம்பசு நிலைகா ணாதே
கதிவழியை யுணர்த்துகுரு வருளால் நோக்கிக்
காட்டிடவே காணுமது காணா தாகில்
விதிவழியே பசுபாசத் துடனே கூடி
விளைவதுவு மழிவதுவு மெய்ய தாமே.

18. மெய்யுடனே பசுவந்து மேவி யொன்றாய்
வேண்டியதோ ரிச்சைதனை மேவ லாலே
வையகத்தி னிடமாகப் பிறந்தி றந்து
வருமென்றே வகுத்துரைத்த வண்மை யோனே
செய்யபதி பாசத்து டன்கூட் டாதே
சிறந்தபசு பாசமுருத் திரனா மோதான்
பையவேநின் பதிவந்து புகுந்த வாறும்
பசுபாசமு ருத்தரிப்பும் பகர்வேண் நேசீர்.

19. பலவகையா னகுடங்கள் தனைநி ரைத்துப்
பாணிகளைப் பூரித்துப் பலகா லுற்று
நிலவியதோர் கதிரவனைப் பார்த்த போதே
நிறைவன்றிக் குறைவாக நின்ற துண்டோ
யலகிலுயிர்க் குளதாகி யமர்ந்தி ருந்து
மதிலணுகாப் பேரொளிதா னகில மெல்லாங்
குலவியதோர் பதியாக நடுவே நின்று
கூட்டுவதும் பிரிப்பதுவுங் குறித்துக் கேளே.

20. கூட்டுவதும் பிரிப்பதுவும் பாச மேதான்
கூறியதோர் பசுபாசத் துடனே கூடி
நாட்டமுடன் பிறந்திறந்து திரிவ தல்லால்
நடுநின்ற பதிவந்து நண்ணு மோதான்
வீட்டிலுள்ள வெளியும்பிற வெளியு மொன்றோ
வெவ்வேறா யிருந்திடுமோ விரும்பிப் பார்க்கில்
ஈட்டுகின்ற பாசத்தை நீக்கி யோதான்
இருந்ததனி லப்பசுவை யிருத்து நீயே.

21. பதியுடனே பசுவந்து மேவி நின்றால்
பாசந்தா னவ்விடமே பற்றி நிற்கும்
கதிவழியை யுணர்ந்தகுரு வாக வந்து
கருணையனே யடியேற்கு காட்டி டீரே
மதியுடையீர் பதிதனிலே பசுவந் துற்றால்
மன்னுகின்ற பாசமது வழங்கா தேதான்
விதிவழியால் கதிர்தோன்ற இருள்தா னோடி
விடிந்தபடி காண்என்று மேவி நில்லே.

22. பஞ்சமலந் தனையறுத்த பரமகுரு நாதர்
பரிவுடன டியேற்குபகர்ந் தபொருள் மூன்றும்
நெஞ்சகத்தி லெழுத்தினைநின் வுதைய மாக்கி
நின்றதுகேட் டருள்புரிந்த நின்ம லன்முன்
அஞ்செழுத்தை அடியேற்கு அருள் புரிவோ மென்றே
அன்புடனே வரவழைத்தாண் டருளக் கடலே
வஞ்சமர வஞ்செழுத்தின் வரலாறும் தன்னை
மாதவனே யுரைத்திடுக வணங்கினன்பு கந்தே.

23. இந்தவுரை பகர்ந்தமாணாக் கனேநீ கேளாய்
எழுத்தஞ்சு வரலாறு மியம்பக் கேளாய்
அந்தமிலா அகாரமே முதலாய்த் தோன்றி
அதனிடத்தி லுவ்வெழுத்தே யடங்கி தோன்றி
சிந்தனைசெய் ஓங்காரஞ் செறிந்து தோன்றி
செப்பரிய மூன்றெழுத்துந் திரண்டொன் றாகிப்
பந்தமற வளர்ந்ததைப்பின் னாக வேதான்
பகர்ந்ததுதான் சிவாயநம பழமீ தென்றே.

24. இருவினையு மகற்றியெனை யாள வேண்டி
இருகதிரு மொருகதிரா யிணக்கஞ் செய்யக்
குருவடிவாய் வந்தகுணக் குன்றி னானே
கூறியதோர் காரமாய்க்கு றித்த தேது
கருவெனமுன் னுதித்ததொரு கார மேது
கருணையுட னோங்கார கருத்தங் கேது
வுருவமென முளைத்ததொரு வெழுத்தஞ் சேது
வுத்தமநம குருபரனே யுரைசெய் வீரே.

25. அகாரமெனு மெழுத்ததுவே சிவம தாகும்
ஆனதொரு வுவ்வெழுத்தே யுயிந்த தாகும்
ஓங்கார மெனுமெழுத்தே யுடல தாகும்
உத்துரைப்பர் குருவினிடத் துண்மை கண்டோ
அகாரமுத லெழுத்தைந்தும் நடுவாய் நின்றே
நலந்தீங்கு தனக்கிடமாய் நடத்து கின்ற
விகாரமில் லையறிவுடன் விளம்பி னீயு
மெய்யிடமா யறிந்திடுக வேதமு ணர்ந்தே.

26. அகாரமாமே யாகாசந் தன்னி லோடி
யனப்பரிய சத்தத்தை யறிந்து மீளும்
வகாரமாமே வாயுவெனும் நிலையைப் பற்றி
மன்னியதோர் பரிசத்தைப் பத்தி மீளும்
சிகாரமாமே வன்னியிட மாக வோடிச்
செறிந்தவுரு வறிந்துடனே திரும்பி நிற்கும்
மகாரமாமே யப்புவுடன் மருவி யோடி
மன்னியநா லிரசத்தை வாங்கி நிற்கும்.

27. நல்லதொரு நகாரம்பி ருவியி னோடி
நலஞ்சிறந்த கேந்தத்தை நயந்து மீண்டு
எல்லைதனி லஞ்செழுத்து மடங்கி யேறி
இயங்கிடும்போ துமிடலையி யங்கு மல்லால்
சொல்லரிய வுடல்தானே யியங்கு மாகில்
தோற்றமுட னொடுக்கமுடன் ஒடுக்க மில்லை
வெல்லரிது ஐந்தெழுத்தின் பெருமை தன்னை
விரித்துரைக்கி லண்டபிண்ட மெளிய தாமே.

28. அத்தனேய டிமுடியுந்தே டிக்கா ணாத
யனலுருவே யன்பரிடத் தமர்ந்த சோதி
முத்தனேமூ லமந்திரமெல் லாவற் றையும்
மொழிந்திடவே கேட்டடியேன் முத்தி பெற்றேன்
சித்தனேஉன் ஐந்தெழுத்தைக் கடந்த போதும்
திருவாக்கா லடியேற்கு தெரிய வேண்டிப்
பத்தியாயுன் இருபாதம் பணிந்தே னய்யா
பரிவுடனே பிரித்தெனக்குப் பகர வேண்டும்.

29. சொல்லரிய மாணாக்க னேகே ளாய்முன்
சொல்லியதோர் அகாரத்தை தொகுத்து நீயே
நல்லதொரு வறிவதனால் நயந்து நோக்கி
நாமுரைத்த நடுவெழுத்தை நடுவே காட்டி
வல்லபடி வணங்கிமனக் கவலை நீக்கி
மகிழ்ந்தனமே லன்புதன்னை வளர வைத்து
இல்லாபோ ராளிப்போ லிங்க மாகி
யிருக்குமிந்த வடிவுதனை யேற்றிக் காணே.

30. நவ்வெழுத்தே முதலாக வைஞ்செழுத்தின் பெருமை
நல்லடியார் தமக்குரைத்து நாயடியென் றனக்கே
யவ்வெழுத்தே நடுவாக அசைவை யேனு
யெழுத்தையன்பு டனேநிறுத்தி யபொருவ மாகி
யிவ்வுடலிற் சிவலிங்க மெனவளரும் வாறே
யெடுத்துணர்ந்த குருபரனே ஏழையடியார் பரவ
எவ்வெழுத்தாய் நின்றுவிளை யாடுமெழி லோனே
ஏதுயடி யேதுநடு வேதுமுடி யய்யா.

31. ஓங்கார மானதுவே நாதமென வுணர்நீ
உற்றதொரு வுறுவெழுத்தை விறுவென வுணர்நீ
ஆங்கார மானதுநீ யன்பதனால் நீக்கு
யகாரமெனு மெழுத்ததுவை யானடியேன் றெண்ணி
நீங்காத மாயைதன்னை நெஞ்சுரத்தால் நீக்கி
நின்றருளை பாத்தக்கால் நீயறிவை கண்டாய்
ஓங்காரத் தொளிதானே யுபதேசப் பொருளும்
உம்பருக்கும் தெரியாத வுண்மைநடு நிலையே.

32. அகாரமெனும் எழுத்ததுவே யாதியெனப் பெயராய்
அரிதனக்கு மெட்டாத வடியெனவே யமரு
முகாரமெனு மெழுத்ததுவே யுத்தநடு நிலையா
யுலகுதொழுந் திருமேனி யுருவமென வளரு
மிகாரமிடும் பிரமனுக்கு மெட்டாத முடிதான்
விளங்கியவோங் காரமென மெய்யுணர்ந்த பார்நீ.

33. ஏதமே தீர்க்க வந்த
ஏதனே யெந்தை யானே
போதனே யருளிச் செய்த
வெழுத்தெலாம் புகழக் கொண்டே
பாதமே முடிமேல் வைத்து
பகர்ந்ததோர் ஒளியைக் காக்க
நாதனே யதனுள் நின்ற
நடுநிலை நவின்ற தேதோ.

34. நடுநிலை யென்று கேட்டு
நயந்தமா ணாக்க னேகேள்
நடுவென நின்ற தொன்று
நலம்பெறு சுளினை நாடி
முடுகிய விருபால் நின்று
முறைமுறை புகுந்து மீண்ட
இடையதும் கடையு மாகி
இருப்பது நிலைய தாமே.

35. தடையற வருளித் தின்றேன்
தவப்பய னில்லை யாலே
விடைவுசத் திருந்த தென்பால்
மீளவு மருள் செய்வீரே
அடைவுடன் சுளினை நாடி
யானது நடுவ தென்று
மிடையுறும் கலையு மாகி
யிருப்பது நிலைய தென்றும்.

36. சுந்திர மதனாற் கேட்ட
தன்மையே சாற்றக் கேளா
முந்திய சுளினை நாடி
மூலறும் பலம தாகும்
சந்திர னிடைய தாகுஞ்
தன்மையை சாற்றி னோம்நாம்
பிந்தியே யுனக்குச் சொன்ன
பின்கலை பேசில் வெய்யோன்.

37. சொன்னதோர் சூட்ச மூன்றுந்
தொகுத்துனக் குரைத்த தேதோ
அன்னிய மாகி யேதான்
அழிந்ததோர் கலைகள் நாலும்
வன்னியின் நடுவே தோன்றி
வந்துவந் தழிவ தல்லால்
துன்னிய கலைகள் வேறும்
தோன்றுமோ தோன்ற லாதோ.

38. படித்திடும் ஆக மத்தின்
பயனெலாம் படித்துப் பார்க்கில்
நடித்திடும் சோதி யென்றே
நவின்றிடு நாலு வேதம்
மடித்தவன் தனக்கு மெட்டா
மலரடி தன்னை யன்பால்
பிடித்தவன் தனக்குப் பேறு
பேசுவர் தனக்குள் தாமே.

39. நன்றுநீ ருரைத்த வுண்மை
நாதனே நயந்து கொண்டேன்
நின்றுளே யியங்கி நிற்கும்
நிற்மல னடிகள் தன்னை
மன்றுளே நிறுத்து மாரும்
வாதுளே யேற்று மாரும்
இன்றுநீ யருள வேண்டும்
ஏகனே யெந்தை யானே.

40. வானமேற் கதிர்க ளோடில்
வைத்தரே சகம தாகும்
போனதோர் கதிர்கள் மீளப்
புகுதலே பூர்க தாகும்
ஆனகும் பகமே தென்னில்
மந்துளே நின்ற தாகுந்
தானமாஞ் சிவயோ கத்தின்
தன்மையை சார்ந்து பாரே.

41. தவயோக மான மேனி
தற்பரா னந்த நாதா
சிவயோக மாக வேதான்
செப்பிய மொழிகள் தன்னை
நவயோக மாக நாயேன்
யந்தன நடுவிற் சார
அவயோக மான தெல்லாம்
அடியனுக் கருள்செய் வீரே.

42. பாதயோ கங்கள் போன்றும்
    பரியேங்கி யோக மென்றும்
பூதயோ கங்கள் என்றும்
    புகழ்ந்தயான் குஞ்ச ரத்தின்
பேதயோ கங்கள் என்றும்
    பேசுசாக் கிரம யோகஞ்
சேதமாம் யோக மெல்லாம்
    செப்பினோம் அவயோ கம்மே.

43. நாயினும் கடையென் றன்பால்
    நடுநிலை யான யோகந்
தாயினு மனைய னாகித்
    தரணியில் வந்து ரைக்கப்
பேயினும் அடியேன் கேட்ட
    பிழைபொருத் தருளு மய்யா
யாயினும் ஞான பாதத்
    தடைவினை யருள்செய் வீரே.

44. போதகமாய் கேட்டமாணாக் கனேநீ கேளாய்
    புகழ்ந்துரைத்த னாரனத்தை புகலக் கேளாய்
வேதன்மா லறியாத வெளியி னூடே
    மேவியதோர் சுடர்மூன்றும் விளியால் நீக்கி
நாதமென வெழுந்தொலி கேட்டப் பாலே
    நடுநின்ற வம்பரத்தை நயந்து போற்றி
சீதமென கமலமலர் பொய்கை தன்னிற்
    சென்றுபுகுந் தாடியதன் செய்கை கண்டே.

45. புலன்களுடன் கரணங்கள் தன்னை யெல்லாம்
பொதுவினிடத் தருளாலே யோக்கி யேதான்
இலங்கிவன ராதாரங் கடந்து சென்றே
இன்பமுறு மெழுத்தொன்றி லிளைப்பு மாறி
மலங்களொரு மூன்றுதன்னை மறுக வோதி
மாசற்ற திருநீற்றை மகிழ்ந்து சாற்றித்
துலங்கியெழு மானந்த சோதி தன்னை
தொழுதிருபோ தகலாத சுகத்தி னாலே.

46. கல்வியெனு சொல்மயக்கை கடந்தப் பாலே
காமமெனு பெருங்கடலை காலால் நீக்கி
செல்வமெனு பெருமாய்கை செயலை நீக்கி
செய்வினைக ளானதெல்லாஞ் சிதற வாட்டி
பல்லளரு மிறுமாக்கன் சமையத் தோரே
பாலனுகா மலரனந்த வடிகள் சேர
வல்லவர்க ளுடலுயிரை வகுத்து காண்பார்
மற்றவர்கள் ஞானவழி மருவ லாமோ.

47. பொய்க்குரு வாக வேதான்
புலம்புவோர் தங்கள் முன்னே
மெய்க்குரு வாக வந்து
விளம்பினீர் ஞான போதஞ்
செய்க்கு முரத்தைப் போட்டு
சென்னலை வளர்க்கு மாபோல்
கைக்குறுங் கனிபோ லென்னை
காடதி கருணை யானே.

48. புலன்களுடன் காணங்க ளவையோ வல்லன்
பூதங்க ளுடன்குணங்கள் வாயு வல்லன்
இலங்கியெழுந் தாதுக்கள் ஏழு மல்லன்
இனியுனையான் பிரித்துரைக்கு மியல்பு கேளா
மலங்கியபோ தடனியும லங்கி நின்றே
மலங்காமல் மகிழ்வுற்று வருவ தெல்லாங்
கலங்கியலை மோதுபுனல் தரளத் தோன்றுங்
கதிரவனும் நீயுமொரு கருத்த தாமே.

49. இடமான மாய்கையுடல் தன்னை யெல்லாம்
இன்னதென்றே தொகுத்துரைத்து எழுதி வைப்பான்
திடமான உயிரளவை யின்ன தென்றே
செப்பிடவே கேட்டதுண்டோ தேசந் தன்னில்
உடலான துனக்குற்ற பாச வீடா
முற்றுநீஉன் னிடமாயு வாவு கின்ற
நடமான கமலபதம் கண்டா லன்றி
நடுநின்ற சோதிதனை நண்ணொான் னாதே.

50. என்னையே எனக்குக் காட்டி
என்னுளே யிருந்த பாதந்
தன்னையுங் கட்டி யாண்ட
சற்குரு நாதா போற்றி
முன்னமே யடியேன் கேட்க
முகமலர்ந் தருளித் தின்று
துன்னிய தத்து வத்தின்
தோற்றமைத் தொகுத்தி டீரே.

51. சத்துவங்க ளாவதெல்லா முடலை கண்டால்
சாட்சியுனக் குரைத்திடநீ சார்ந்து பாராய்
தத்துவமா முடல்தனிலே யுறங்கி னால்நீ
தத்துவங்க ளறிவதுண்டோ சார்ந்த பேரை
தத்துவத்தி லுறங்கியெழுந் திருந்தால் நீயே
தானறிவை தத்துவந்தா னறியா தொன்றுந்
தத்துவமா முடலளவுந் தொண்ணூற் றாறுந்
தப்பாது நீயதனை சார்ந்து பாரே.

52. நிரந்ததொரு சுக்கிலந்தா னாடி யொன்றில்
நேர்படாது எதிர்ந்துநிற்க நேர்ந்த போது
பரந்ததொரு கருக்குழியிற் பாய்ந்த போது
பத்தியிடுந் தத்துவங்கள் பகரக் கேளாய்
கரந்திகளும் குகைபிடித்துச் செம்பொ னிட்டுக்
கனல்தனிலே யுருகியைதன் களிம்பை போக்கு
யுரந்திகளக் கருக்குழியில் வார்த்த போதே
யுருவாகி வந்ததல்லா லுருமுன் னுண்டோ.

53. படிமிசை யோர்கள் காண
பகர்தத்து வங்கள் எல்லாம்
அடியேனுக் கருளிச் செய்த
அதிசெய மன்றோ வன்றோ
கடிமலர் கொன்றை சூடும்
கருணையங் கடலே யெந்தன்
குடிமுழு தாள வந்த
சித்தனே போற்றி போற்றி.

54. ஏகனே போற்றி போற்றி
எனைகுரு நாதா போற்றி
யோகமாம் கருத்தி னாலே
யுரைத்ததோர் யுண்மை கண்டேன்
பாகமே சுத்தி நிற்கப்
புவரியா லம்ப லத்தே
தாகமில் லாம லென்றுந்
தாண்டவம் புரிவ தென்னோ.

55. சத்தியே பாச மாகத்
தாங்கிய சுளினை நாடி
முத்திசேர் மன்ற மாக
முனிவரு ளிருவர் தாமுந்
தித்தியென் றொருத்தி யாடுஞ்
சிறந்ததோர் கதிர்க ளாகச்
சத்தியஞ் சோதி தானே
சதாகால மாடி நிற்கும்

56. பாசமே சத்தி யென்றீர்
பகர்ந்திடு கருமந் தன்னை
நேசமா மன்ற மென்றீர்
நித்தலு மாடு வானை
வீசிய சோதி யென்றே
விளம்பிநீர் மெய்யி னுள்ளே
யாசையால் கண்ட பேரை
யறைந்திடென்று மறைதல் வேண்டும்.

57. நந்தியுடன் குருமுனியும் வியாதன் றானும்
நலஞ்சிறந்த வசிட்டருடன் நாலு பேரும்
அந்திரஞ்சேர் கௌதமரோ டஞ்சு பேரும்
அகமுடைய காசிபரோ டாறு பேருந்
தந்திரமாங் கலைக்கொட்டுத் தவத்தொன் றானுந்
தாங்கியபுட் பகமாவி ருடிதன் னோடு
இந்தவகை யிருநாலு முனிவ ரெல்லாம்
இதையநடங் கண்டவர்க ளின்னங் கேள்நீ!

58. விதம்பயிலு நாரதனும் சூதன் றானு
மிக்கதொரு சயமுனியு மிகுத்த வாக்கால்
மதம்பெருக துருவாச முனிவன் றானும்
அந்திரஞ்சேர் திருமூல தேவன் றானும்
பதஞ்சலியு மியாக்கிற முனிவன் றானும்
பரிவினுட னிமையோர்கள் முனிவர் தாமும்
இதம்பெருஞ்சொல் வாதவூ ரிறைவன் றானும்
இதயநடங் கண்டவர்க ளியல்பி னாலே.

59. மூலத்தே நின்றவர்கள் நடனந் தன்னை
முனிவரெல்லாங் கண்டதென்று மொழிந்தீ ரய்யா
ஞாலத்தோ ருய்யவருள் சுரந்து போந்து
நாயடியேற் குன்றியருள் நாத யோகி
சீலத்தால் நின்றாடுந் தேவ னாற்கு
சிறந்துமுக மைந்துடனே நயன மூன்றுங்
கோலத்தா னானதொழில் ஐந்து தானும்
குருபரனே யடியேற்குக் குறித்தி டீரே.

60. சத்தமே யீசான முகம தாகுந்
தயங்கியதோர் பரிசந்திர புருட மாகும்
சித்தமிகும் ரூபமெய்க் கோர மாகும்
சிறந்தவிர் சந்தான வாம மாகும்
பத்தியுடன் கேந்தத்தைப் பகர வேண்டி
பரிவினுடன் சத்தியோ சாத மாகும்
எத்தலமும் விளங்கியதோர் யேன மூன்று
மெரிகதிர்சந் திரனாக வியம்பும் வேதம்.

61. சடத்தையுருப் பருத்துதலால் திருட்டி யாகுஞ்
சார்வுடனே வளத்துவதால் திதிய தாகும்
மிடத்திலுறப் பொசிப்பதுசங் கார மாகு
மியக்கமுடன் அடத்தலதிரோ பாவ மாகும்
படித்தபல நூல்முதலா யறிவு சேரப்
பகட்டியதோ ருறமனுக் கிரக மாகுந்
திடத்துடனே கேட்டமாணாக் கனேநீ கேளாய்
செப்பினோம் நீயுரைத்த சேதி யெல்லாம்.

62. முகமைந்து டையனான மூன்று தானு
மொழிகின்ற தொழிலைந்து மொழிந்தீ ரய்யா
தயவுடனே அடியேனை யாள வேண்டி
சற்குருவாய் வந்துதித்த தன்மை யானே
சுகமனைத்து முடல்தனிலே நின்ற கூற்றை
தொகுத்துரைத்தே யடியேற்கு சொல்லக் கண்டே
அகமகிழ வரும்பொருளே யாதி நாதா
வண்டத்தின் தோற்றமினி யருள்செய் வீரே.

63. அடிமுடி யறியொ ணாத
அம்பரர் பரத்தில் நின்று
திடமுட னுணர்த்தக் கேளாய்
சிற்பரா பரத்தி னின்றே
இடைவிடாப் பரந்தான் சென்று
இதனிடை சிவன்வந் தெய்தி
வடிவெனும் சிவன்பால் நின்ற
வணங்கிய பரையந் தெய்தும்.

64. பரையிடங் குடிலைத் தோன்றி
பகர்ந்திடு குடிலை தன்னில்
விரைவுடன் நாதந் தோன்றி
விளங்கிய நாதந் தன்னில்
நிரைதரு விந்து தோன்றி
விந்துவில் நேச மாக
வருமொரு சதாசி வன்பால்
மயேசுரர் தோன்று மிப்பால்.

65. உருத்திரன் தோன்று மிந்த
உருத்திரன் தன்னில் நின்றே
விருத்தமில் மாயோன் றோன்று
மாயனில் மலரோன் றோன்று
திருத்திய மலரொன் றன்பால்
சிறந்ததோர் வேதந் தோன்றும்
கருத்தினால் வேதஞ் சோதி
தன்னிறும் தோன்றக் காணே.

66. விண்ணிடை வாயுத் தோன்றி
வாயுவில் விளங்கி யோங்கு
கண்ணெனும் வன்னி தோன்றி
வன்னியிற் சார்ந்து நின்ற
தண்ணெனு மப்புத் தோன்றி
யப்புவில் தோன்றி நின்ற
மண்ணது தோன்று மண்ணில்
அன்னமே வளரு மிப்பால்.

67. அன்னத்தி னிடமாய் தோன்றும்
அளவிலாச் சீவ னெல்லா
மன்னத்தி னிடமாய் மீள
வழிந்திடு மழிந்த பின்னும்
பொன்னொத்த பூமி யின்கண்
புகுந்திடு பூசந் தானு
மின்னொத்த அப்பு வின்கண்
விரும்பினா யடங்கு மப்பால்.

68. அப்புவுந் தேய்வின் கண்ணே
அடங்கிடுந் தேயு தானுஞ்
செப்பிய வாயு வின்கண்
செறிந்திடும் வாய்வு தானுந்
தப்பற விண்ணிற் சென்று
தரித்திடும் தரித்த பின்னு
மெப்பர வேதஞ் சோதி
சோதியி லொடுங்குந் தானே.

69. தந்திர மாகச் சென்றே
சதாசிவ தன்னி லோடும்
முந்திய சதாசி வன்றான்
முறைவழி விந்து சேரு
மிந்துவும் நாதத் தின்கண்
மேவிடும் நாதன் றானும்
அந்தர மான பாசக்
குடிலையி லடங்குந் தானே.

70. பாசமாங் குடிலை தானும்
பரையிடத் தடங்கும் பால
நேசமாம் பரைதான் சென்றே
நின்றதோர் சிவத்திற் சேரு
மாசையால் சிவன்றான் சென்று
யடக்கிடும் பரத்தின் கண்ணே
ஓசையால் பரந்தான் சென்று
பராபரத் தொன்றி டாதே.

71. மாதினை யிடத்தே வைத்த
வாதனே வன்மை யானே
நீதியாம் பராப ரத்தில்
நேசமாம் பரந்தான் சென்று
ஏதினாற் கூடா தேதான்
இருப்பதை யின்ன தென்று
பேதியர் மனத்தி னானே
பேசுக வடியே னுக்கே.

72. சிரத்தினாற் றுளக்கி யன்பு
செய்துமா ணாக்க னேகேள்
பரத்திலே சென்ற தெல்லாம்
பாரிடை பிறந்து மீளும்
தரத்தினாற் பராப ரத்தின்
தானது வடங்கா தென்றே
வரத்தினாற் வேத மெல்லா
முரைசெயும் பரத்தி னின்றே.

73. வேதமும் வேதன் தன்பால்
மேவிடு வேதன் றானும்
ஆதவன் தன்பால் சென்றும்
அன்னிய மாயன் றானு
ஓதிய வுகுத்தி ரன்பால்
ஒருங்கிடு வுகுத்தி ரன்தான்
ஏதமில் மயேசு ரன்பால்
எய்திடு மயேசு ரன்தான்.

74. பலவிதமாய் பகர்ந்தப ரந்தா னேது
பரையேது சிவமேது பரையங் கேது
குலவிவளர் குடிநிலையி ....
கூறியதோர் விந்துவெனக் குறித்த தேது
நிலவியதோர் சதாசிவமாய் நின்ற தேது
நீங்காத .... நின்ற தேது
வுலகுதொழ நின்றவுருத் திரனா ரேது
வுற்றதொரு மாலயனா யுரைத்த தேதோ.

75. மன்னியதோர் வேதமெனுஞ் சோதி யேது
வாயுவுடன் றேயுவென்னு வன்னி யேது
வுன்னிவளர் அப்புவென்று ரைத்த தேது
வுத்தமனே பிருதிவியென் றுணர்த்த தேது
வுன்னிதமாய் நின்றதோரன் டத்துள் ளேயே
யருளியதெல் லாமுடலி லறிய வேதான்
இன்னிலத்தி லுயிர்களெல்லா நயந்து போற்று
நடுநின்ற சற்குருவே நயந்தி டீரே.

76. குருவுரைத்த வுண்மைபரா பரமே யாகுங்
கூட்டிடாப்ப ரந்தானே வெளிய தாகும்
மருவுகின்ற சிவமதுதா னினவே யாகும்
மன்னுகின்ற பரைதானே மனம தாகும்
உருவமென முளைத்ததொரு குடிலை மங்கை
கூற்றதொரு நாதமது பரனு வாகும்
மருவமென நின்றதொரு விந்து சேர
மனானதொரு சதாசிவமோ டஞ்சு பேரும்.

77. சத்தமுதலா கிநின்றபுல னகன டந்தாந்
தாளவில்லா வேதமது தானே தென்னில்
சித்தமெனு பூதிசிறந் தவைய தாகுஞ்
செப்பியதோர் பூதங்கள் ஐந்து தானுந்
தித்தியெனு முடலாகச் சேர்ந்து நிற்குந்
திருவருளால் நீயதனை தெரிசித் தேதான்
முத்திபெறும் நடுநாடி தனிலே நின்று
மூலவரு ளுடனீயு முடுகு வாயே.

78. அருவுரு வாக வேதான்
அடியவர்க் கன்பு கந்து
குருவடி வாக வந்த
கோதிலா குணத்தி னானே
திருவடி யுணர வந்த
தேசிகன் செயல்கள் தன்னைப்
பகருபத் தியமே வேணும்
பகர்ந்திடீர் பரமெய் யானே.

79. வணங்கிய வன்பனே கேள்
வரந்தரு குருவின் செய்தி
துணங்கியே கலைக ளெல்லாம்
நோக்கியே யுணர்வோ னாகி
பிணங்கிய சமையத் தோர்பால்
பேசிடாப் பெருமை யாகிக்
குணங்குறி யில்லா நிற்குங்
குருபரன் கோதி வானே.

80. அடிமுடி தேட நின்ற
அரிஅயன் தனக்கு மெட்டா
வடிவெனு முருவந் தன்னை
மனத்தினுள் வைத்து நின்றே
முடியிது அடியி தென்று
மூலமாம் பரத்தை நாடி
உடலினிற் றெளிவென் பாரே
உத்தமக் குருவும் வாரே.

81. உத்தமக் குண ....

ரொண்ணாதக் கலைக ளெல்லாம்

புத்தியா லாராய்ந் தேதான்

பொதுநடத் துண்மை தேடு

முத்திசேர் குருவைச் சேர்ந்து

மும்மலக் கட்டை நீக்கி

வித்தக பரத்தை மேவி

விளங்குவன் செம்ம லானே.

82. எத்தனை யுண்மை யெல்லா

எடுத்தெனக் குரைத்தீ ரய்யா

அத்தனை யுண்மை யெல்லாம்

அறிந்தன னாதி யாயுள்

சித்தமும் மனமுங் கூர்ந்து

தெரிசிக்கும் சீவன் செய்யும்

பத்தியு மொழுக்கந் தானும்

பகர்ந்திடு பரமா னந்தா.

83. குருவினை வணங்கி யேதான்

கூறிய பொருள்கள் மூன்று

முருகிய மனத்த னாகி

யுத்தமாம் அளித்தி டென்னும்

வரும்வழிக் கன்பு செய்தே

மாசிலா மனத்த னாகித்

திருவருள் தவத்தின் கண்ணே

சேர்பவன் செம்ம லானே.

84. கடிமலர் கொன்றை சூடுங்
கண்ணுதர் கயிலை நாதர்
யடியனுக் கன்பு கந்தே
யருளினிற் றிருந்து கொண்டேன்
படிமிசை யோர்க ளுய்யப்
பாதமே நாலு தன்னை
வடிதமி ழறிவு ணர்ந்தே
வாக்கினா லருளு மய்யா.

85. அஞ்செழுத்தாய் நின்றதுவே சரிதை யாகும்
ஆனதொரு கிரிகைசிவ லிங்க பூசை
வஞ்சமற நின்றதுசி வயோகந் தானே
வளர்கின்ற வன்னியுட கால தாகுந்
தஞ்சமற நின்றதோர் ஞான பாதந்
தனையுணர்ந் துதற்பரத்தை சார்த லாகும்
பஞ்சமலந் தனையறுத்த பரத்த துண்மை
பகர்ந்தபடி தனையுணர்ந்து பார்த்து நில்லே.

86. சரிதையின் பாதம் நின்றோர்
சாலோக பதத்தைச் சார்வார்
கிரிகையின் பதம்நின் றோர்க்குக்
கிடைப்பது சாமீ பந்தான்
அரியதோர் யோகக் தாற்கு
வான்சர ரூப மாகும்
உரியதோர் ஞானத் தாற்கு
உகந்தசா யுட்சியந் தானே.

87. அருள்பரவுங் குருபரனே யாதி நாதா
அடியவர்க்க ருள்செய்த வன்பு தன்னை
மனதிடமா யுளக்கொண்டு மாய்கை தீர்ந்தே
இருவினையு மகத்திடவே வந்தாட் கொண்ட
ஏகனே யெனையாளு மெப்பி ரானே
. . . .
கருவிழியிற் சுழலாமல் அடியேற் குந்தன்
கமலபதப் பெருமைதன்னைக் காட்டி டீரே.

88. முண்டகஞ்சேர் மூலவரு ளுடனே நின்று
முயங்கிடவே யருசுடரை முடியொன் றாக
கண்டதொரு வறிவதனால் மனத்தை நீக்கி
கருணையுடன் றவமியற்றுங் கருத்தோ னாகித்
தொண்டர்குழாந் தலையெல்லாந் தொழுது வாழ்த்தி
சுகத்துடனே சிவயோகித் தொழிலே யாகி
பண்பயன்மால் .... பாதந் தன்னைப்
பத்தியிரு தவமுனிக்குப் பலிக்க வேதான்.

89. சொன்னதொ ருண்மை யெல்லாந்
தொகுத்துநா னறிந்து கொண்டேன்
அன்னமே லேறினும். ....
ஆழிமேல் அமர்ந்தொன் றானும்
முன்னமே தேடி நிற்க
மூலவம் பரத்தே நின்று
என்னையே யாண்டு கொண்டே
ஏகனே யெந்தை யானே.

90. பதிபசு பாச மென்று
பகர்ந்ததோ ரெழுத்துஞ் சென்று
மதிதரு லிங்க மென்று
மலரடி முடிய தென்றுங்
கதிதரு நடுவ தென்றுங்
கருணைசேர் யோக மென்றுங்
சதிரெனக் காட்டி யாண்ட
சற்குரு நாதா போற்றி.

91. கர்மயோ கங்க ளென்றுங்
கருணைசேர் ஞான மென்றுந்
தன்னையே யறிய வென்றுந்
தத்துவப் பஞ்சி யென்றும்
முன்னமே நின்ற கூற்றை
முறையறி முனிவ னென்றும்
இன்னமா யருளிச் செய்த
வித்தகர் வேத மூர்த்தி.

92. நயனமு முகமோ ரைந்து
நாதனார் தொழிலோ ரைந்தும்
வியனுட னண்ட பிண்டம்
விரிந்துமீண் டங்கு மென்றுஞ்
செயமுடன் வந்தாட் கொள்ளுந்
தேசிகன் செய்கை தானும்
நேயமு மடியேன் கேட்க
நிகழ்த்திய குருவே போற்றி.

93. அடியவர் உய்ய வேதான்
ஆனதோர் பாதம் நாலும்
வடிவுட னருளிச் செய்த
மன்னிய வடியார் சொல்லுங்
கடிமலர்ப் பதவி னாலுங்
கருணையா லருளிச் செய்தே
நடுவனைக் கமல நாத
நயத்தையே யுரைத்தோய் போற்றி.

94. அஞ்செழுத் துணர்த்த வென்றே
அன்பினால் அவர்வ ளைத்து
நெஞ்சகத் துள்ளே நீயே
நின்றதோர் பெருமை காட்டி
வஞ்சம னைத்து நீக்க
மானடச் சட்டை போற்றித்
தஞ்சமாய் ஆண்டு கொண்ட
சற்குரு நாதா போற்றி.

95. அடியேனை யாள வேண்டி
ஆனந்த வடிவு மாகிப்
படிமிசை போர்கள் காணப்
பாண்டிய நாட்டில் வந்தேன்
அடியவன் தேடிக் காணா
நிற்மல னடிக ளெந்தன்
முடிமிசை வைத்தாட் கொண்ட
முத்தனே போற்றி போற்றி.

96. என்றுநான் போற்றி நிற்க
என்குரு ஏக நாதன்
நன்றுநின் வணக்க மென்றே
நடுநிலை யுணர்ந்து பார்க்கில்
குன்றுபோ லருளால் நோக்கிக்
கூறிய வடியார் வாழ்கச்
சென்றுநல் லடியா ரேற்ற
யிருந்தனன் சிவயோ கத்தே.

97. ஆதிநா யகன்றான் யோகம்
அமர்ந்தபின் அன்பு செய்தே
நீதியாய் சிவபோ கத்தில்
நிலைபெறு கின்ற தாகக்
கோதிலா அறிவு தோன்றிக்
கூறிய வுண்மை தன்னைப்
பேதியர் மனத்தார் கேட்கப்
பேசினோன் பெறுக வென்றே.

98. அருளாரு வடிவ மான
ஆனந்த விளக்கந் தன்னை
குரவரு ளாகு மென்றே
கூறினோர் கூறக் கேட்டோர்
மருளருள் வினையை நீக்கி
மாதவ மடைந்து பின்னும்
திருமலிந் துலகில் வந்து
சிவபதம் பெறுவர் திண்ணம்.

99. அறுசமை யத்தோர் வாழ்கப்
அடியவர் களாவர் வாழ்க
மறுவிலா லையங்கள் வாழ்க
மாமறை யோர்கள் வாழ்க
பெறுதவத் தோர்கள் வாழ்க
பெருகியதிரு வெண்ணீற்றிருவர் வாழ்க
அறுபவர்கள் வாழ்க வாழ்க
உரைத்தநூ லுண்மை வாழ்க.

100. நந்தன வருஷந் தன்னில்
நலம்பெறு துலாமா தத்தில்
சிந்தைசே ரிரண்டாந் தேதி
சிறந்தசித் திரை நாள் வாரம்
அந்தமாங் கதிரோன் றானும்
ஆனந்த விளக்கந் தன்னைத்
தந்திமா முகத்தோன் காக்க
சாற்றினோன் தமிழ் மாறன் முன்.

ஆனந்தவிளக்கம் முற்றும்.

நன்றாக சிவகுரு நாதன் துணை
சுப்பிரமணிய சுவாமிபாதாரவிந்த மேகதி
சரவணபவன்

பாடற் முதற்குறிப்பு அகராதி

	பாடல்எண்
அ	
அகாரமெனு	25
அகாரமாமே	26
அகாரமெனும்	32
அஞ்செழுத்	94
அஞ்செழுத்தெழுத்	85
அடிமுடி	63, 80
அடியவர்	93
அடியேனை	95
அத்தலத்தி	9
அத்தனேய	28
அப்புவந்	68
அய்யருளக்	15
அருவுரு	78
அருள்பரவுங்	87
அருளாரு	98
அறிவுளோர்	4
அறுசமை	99
அன்னத்தி	67
ஆ	
ஆதிநா	97
ஆனந்த	12
இ	
இங்கவரும்	3
இடமான	49

இந்தவுரை	23
இருவினையு	24

உ

உத்தமக்	81
உருத்திரன்	65

எ

எத்தனை	82
என்றுமுன்	6
என்றுரைத்த	13
என்றுநான்	96
என்னையே	50

ஏ

ஏதமே	33
ஏதனே	54

ஓ

ஓங்கார	31

க

கடிமலர்	84
கர்மயோ	91
கருக்குழியே	10
கந்வியெனு	46
குருவினை	83
குருவுரைத்த	76
கூட்டுவதும்	20

ச

சடத்தையுருப்	61
சத்தமுதலா	77
சத்திமே	60
சத்தியே	55
சத்துவங்க	51
சரிதையின்	86
சிரத்தினாற்	72
சுந்திர	36
சொல்லரிய	29
சொன்னதோர்	37
சொன்னதொரு	89

த

தடையற	35
தந்திர	69
தவயோக	41
திருமா	7
தையலுடன்	11

ந

நடுநிலை	34
நஞ்சர	5
நந்தியுடன்	100
நந்தன	57
நயனமு	92
நல்லதொரு	27
நல்வெழுத்தே	30
நன்றுநீ	39

நாயினும் 43
நிரந்தவொரு 52

ப

பஞ்சமலத் 22
படித்திடும் 38
படிமிசை 53
பதிதனையும் 17
பதியுடனே 21
பதியென்றும் 16
பதிபசு 90
பரையிடங் 64
பல்வகையா 19
பலவிதமாய் 74
பாசமாங் 70
பாசமே 56
பாதயோ 42
புலன்களுடன் 45, 48
பேசுபுக 2
பொய்க்குரு 47
போதகமாய் 44

ம

மன்னியதோர் 75
மாதினை 71
முகமைந்து 62
முண்டகஞ்சேர் 88
முன்னுரைத்த 14
மூலத்தில் 1

மூலத்தே 59
மெய்யுடனே 18

வ

வடகயிலை 8
வணங்கிய 79
வானமேற் 40
விண்ணிடை 66
விதம்பயிலு 58
வேதமும் 73

அடிக்குறிப்பு

(பதிப்பாளர் வாய்பாடு கருதி மாற்றம் செய்தவை)

பாடல் எண்	காணப்பட்ட வடிவம்	திருத்திய வடிவம்
4	அறிவுள்ளோர்,	அறிவுளோர்,
	செறிவுள்ளோர்.	செறிவுளோர்.
14	பொருளுடலு	பொருளுமுடலு
15	கனிபோல்	கனியினைப்போல்
18	நேசிடீர்	நேசீர்
30	எதுயடி	ஏதுயடி
33	வெழுத்தெல்லாம்	வெழுத்தெலாம்
41	மொளிகள்	மொழிகள்
43	மையா	மய்யா
67	அளவில்லாச்	அளவிலாச்
83	அளத்திடனென்னும்	அளித்திடென்னும்

****